கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

2013 / 2014 (ஜனவரி - 2018)

## HY/S 2122 History of Europe AD 1453 - 1789

## HY/S 2122 ஐரோப்பிய வரலாறு கி.பி 1453 - 1789

நேரம் : 02 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

பகுதி – I

01. "நாடுகாண் பயணங்களும் புவியியற் கண்டு பிடிப்புக்களும் உலகில் ஐரோப்பியரின் ஆதிக்கம் நிலைபெறுவதற்குக் காரணமாக அமைந்திருந்தது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களினூடாக ஆராய்க.
    (அ) போர்த்துக்கலின் நாடுகாண் பயணங்கள் (12 புள்ளிகள்)
    (ஆ) ஸ்பானியரின் சாதனைகள் (13 புள்ளிகள்)

02. ஐரோப்பிய மறுமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    (அ) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? (12 புள்ளிகள்)
    (ஆ) மறுமலர்ச்சியின் விளைவுகளைச் சுருக்கமாக விளக்குக. (13 புள்ளிகள்)

03. சமய சீர்திருத்தவாதிகளில் மேல்வருவோரின் பங்களிப்பினை ஆராய்க.
    (அ) மாட்டின் லூதர் (12 புள்ளிகள்)
    (ஆ) ஜோன் கல்வின் (15 புள்ளிகள்)

பகுதி – II

04. முப்பதாண்டுப் போருக்கான காரணங்களை நுணுகி ஆராய்க. (25 புள்ளிகள்)

05. "ஐந்தாம் சாள்சின் ஆட்சிக்காலத்தில் ஸ்பானியாவின் ஆதிபத்தியம் ஐரோப்பாவில் உன்னத நிலையை அடைந்திருந்தது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை பரிசீலனை செய்க. (25 புள்ளிகள்)

06. பிரஷ்யாவின் எழுச்சிக்கு வழிகாட்டியவர்களில் மாமன்னர் இரண்டாம் பிரடெரிக்கின் (1640 - 1686) பங்களிப்பு முக்கியமானது. இதனை அவரது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையினூடாக மதிப்பீடு செய்க. (25 புள்ளிகள்)